# பதிவுசெய்யப்படாத சுகாதார சேவை வழங்குநர்களுக்கான நடத்தைக் கோட்பாடு

**Public Health (General) Regulation 2002, Schedule 3 (பொதுமக்கள் சுகாதார (பொது) ஒழுங்கு விதி 2002, அட்டவணை 3 இன் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது).**

## 1 விளக்கங்கள்

இந் நடத்தைச் சட்டக் கோவையில்:

***சுகாதார சேவை வழங்குநர் (health practitioner)*** மற்றும் ***சுகாதார சேவை (health service)*** என்பன *Health Care Complaints Act 1993* இல் உள்ள அதே அர்த்தங்களைக் கொண்டுள்ளன.

**குறிப்பு:** இச்சொற்பதங்களுக்கு *Health Care Complaints Act 1993* பின்வருமாறு அர்த்த விளக்கம் தருகின்றது.

***'சுகாதார சேவை வழங்குநர்'*** எனும் பதம் சுகாதார சேவை வழங்கும் ஒரு நபரைக் குறிக்கும் (அத்தகையவர் சுகாதாரப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவராயிருந்தாலும், இல்லாவிடினும் சரியே).

***சுகாதார சேவையில்,*** அது பொது அல்லது தனியார் சேவைகள் மூலம் வழங்கப்படுபவையாயினும் அதில் பின்வருவன உள்ளடங்கும்:

(a) மருத்துவ, வைத்தியசாலை மற்றும் தாதியர் சேவைகள்,
(b) பல் மருத்துவ சேவைகள்,
(c) மன நல சேவைகள்,
(d) மருந்தளிப்புச் சேவைகள்,
(e) அம்புலன்ஸ் சேவைகள்,
(f) சமூக சுகாதார சேவைகள்,
(g) சுகாதாரக் கல்வி சேவைகள்,
(h) பத்திகள் (a)-(g) யில் குறிப்பிடப்பட்ட சேவைகள் எதனையும் நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான பொதுநல சேவைகள்,
(i) பாத மருத்துவர் (podiatrists), முதுகுத்தண்டு, மூட்டமுக்கு மருத்துவர் (chiropractors), எலும்பு, தசையமுக்கு மருத்துவர் (osteopaths) கண் பரிசோதகர்(optometrists), இயன்மருத்துவர் (physiotherapists), உளநல மருத்துவர் (psychologists), மற்றும் கண்ணாடி வழங்குவோர் (optical dispensers) ஆகியோரால் வழங்கப்படும் சேவைகள்
(j) உணவுமுறை வல்லுநர்கள், உடற்பிசைவு வல்லுநர்கள் (masseurs), இயற்கை மருத்துவர்கள் (naturopaths) அக்யுபன்க்சர் மருத்துவர்கள், உடலியக்கத்திறன் பயிற்சியாளர்கள் (occupational therapists), பேச்சுமுறை மருத்துவ வல்லுநர் (speech therapists), செவிப்புல ஒலியியல் மருத்துவர்கள் (audiologists), செவிமடுப்புத் திறனாய்வாளர்கள் (audiometrists), மற்றும் கதிர்ப் படப்பதிவாளர் (radiologists) ஆகியோரால் வழங்கப்படும் சேவைகள்,
(k) மாற்று சுகாதார பராமரிப்புத் துறைகளில் வழங்கப்படும் சேவைகள்,
(l) மருத்துவத் தடயக் குறியியல் சேவைகள் (forensic pathology services),
(m) *Health Care Complaints Act 1993* இன் நோக்கங்களுக்காக, 'சுகாதார சேவை' என சட்டங்கள் மூலம் பரிந்துரைக்கப்பட்ட ஒரு சேவை.

## 2 நடத்தைக் கோட்பாட்டைச் செயற்படுத்தல்

பின்வருவனவற்றால் வழங்கப்படும் சுகாதார சேவைகளுக்கு நடத்தைக் கோட்பாடு பொருந்தும்:

(a) சுகாதாரப் பதிவுச் சட்டத்தின் கீழ், பதிவு வேண்டப்படாத சுகாதாரத் தொழில் நடத்துநர்கள் (பதிவு நீக்கப்பட்ட சுகாதாரத் தொழில் நடத்துநர்கள் உட்பட) மற்றும்
(b) சுகாதாரப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, தமது பதிவுடன் தொடர்பற்ற சுகாதார சேவைகளை வழங்கும் சுகாதாரத் தொழில் நடத்துநர்கள்.

**குறிப்பு:** இச்சட்டக் கோவை அமுலாகின்ற சுகாதார சேவைகள் வழங்கல் தொடர்பான வேறு தேவைகளுக்கும் சுகாதார சேவை வழங்குநர்கள் உட்படலாம்: அவற்றுள் உதாரணமாக சட்டத்தின் பகுதி 2A- யினால் விதிக்கப்பட்ட தேவைகள் மற்றும் தோல் உட்செலுத்தல் செயன்முறைகள் தொடர்பான சட்டத்தின் கீழுள்ள ஒழுங்குவிதிகள் என்பனவும் உட்படும்.

## 3 சுகாதார சேவை வழங்குநர்கள், பாதுகாப்பான மற்றும் நன்நெறியுடனான விதத்தில் சேவைகளை வழங்கவேண்டும்

(1) சுகாதார சேவை வழங்குநர்கள் பாதுகாப்பானதும், நன்நெறியுடனுமான விதத்தில் சுகாதார சேவைகளை வழங்க வேண்டும்.
(2) உப பிரிவு (1) இன் நிபந்தனையுடன் மட்டுப்படுத்தாமல் சுகாதார தொழில் வழங்குநர்கள் பின்வரும் நெறிகளுக்கும் இணங்க வேண்டும:
  (a) ஒரு சுகாதார சேவை வழங்குநர் தமது தொழிற் துறையில் தேவையான தேர்ச்சியைப் பேணுதல் வேண்டும்.
  (b) ஒரு சுகாதார சேவை வழங்குநர் தனது அனுபவத்திற்கும் அல்லது பயிற்சிக்கும் அப்பாற்பட்ட சுகாதார சேவையை வழங்கக்கூடாது.
    (b1) ஒரு சுகாதார சேவை வழங்குநர் தாம் வழங்கத் தகுதிபெறாத சேவைகளை வழங்கக்கூடாது.
    (b2) ஒரு சுகாதார சேவை வழங்குநர் தாம் பெற்றுள்ள குறிப்பிட்ட தகைமைகளை வைத்து தாம் தமது பயிற்சித் துறையில் சிகிச்சையளிக்க தேர்ச்சியும் திறனும் பெற்றிருப்பதாக தமது வாடிக்கையாளர்களை ஏமாற்றவோ தவறாய் வழிநடாத்தவோ கூடாது.
  (c) ஒரு சுகாதார சேவை வழங்குநர், வாடிக்கையாளரின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய சிகிச்சைகளை அல்லது கருவிகளையே பரிந்துரைக்க வேண்டும்.
  (d) ஒரு சுகாதார தொழில் வழங்குநர் தம்மால் வழங்க முடியுமான சிகிச்சைகளின் வரையறைகளை கவனத்தில் கொள்ள வேண்டியதோடு, பொருத்தமான சூழ்நிலைகளில் வாடிக்கையாளர்களை வேறு தேர்ச்சிமிக்க சுகாதாரத் சேவை வழங்குநர்களிடம் அனுப்ப வேண்டும்.
  (e) பொருத்தமான நிலையில் சுகாதார சேவை வழங்குநர், மேலதிக அபிப்பிராயங்களையும், சேவைகளையும் பெற வேண்டுமென தமது வாடிக்கையாளர்களுக்குப் பரிந்துரைக்க வேண்டும்.
  (f) சாத்தியமானதும், தேவையானதுமாயின், சுகாதார சேவை வழங்குநர் தனது வாடிக்கையாளர்களுக்கு, வேறு பொருத்தமான சுகாதாரப் பராமரிப்பு வல்லுநர்களைக் கண்டறிய உதவ வேண்டும்.
  (g) தாம் பெறுகின்ற சிகிச்சைகள் (இருக்குமாயின்) பற்றி தமக்கு சிகிச்சையளிக்கின்ற மருத்துவ தொழில் வல்லுநரிடம் தெரிவிக்கும்படி தனது வாடிக்கையாளரை ஒரு சுகாதாரத் தொழில் வழங்குநர் ஊக்குவிக்க வேண்டும்.
  (h) ஒரு சுகாதார சேவை வழங்குநர், தான் வழங்கும் சிகிச்சைகளுக்கும், தடுப்பு முறைகளுக்குமிடையிலும் சுகாதார சேவை வழங்குநர் அறிந்திருக்கின்றதும் தமது வாடிக்கையாளர் தற்போது பெறுகின்ற அல்லது எடுக்கின்றதுமான வேறு மருந்துகள் சிகிச்சைகளுக்குமிடையிலும் உள்ள – அவை அறிவுறுத்தப்பட்டவையாயினும், இல்லையாயினும் சரியே, – பாதகமான விளைவுகள் இருக்குமாயின் அவை பற்றி நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.
  (i) ஒரு வாடிக்கையாளருடனான ஆலோசனையின்போது அசம்பாவிதம் ஏதும் நேரின், அதனை எதிர்கொள்ளத் தேவையான முதலுதவி கிடைப்பதை ஒரு சுகாதார சேவை வழங்குநர் உறுதி செய்ய வேண்டும்.
  (j) ஒரு சுகாதார சேவை வழங்குநர், வாடிக்கையாளருடனான கலந்தாலோசனையின்போது வினயமான அசம்பாவித நிலை ஏதும் ஏற்படுமாயின், தகுந்த அவசர சேவையை (உதாரணமாக, அம்புலன்ஸ்) பெற வேண்டும்.

## 4 தொற்று நோய் ஒன்றினால் பாதிக்கப்பட்டுள்ள மருத்துவ சேவை வழங்குநர்

(1) வாடிக்கையாளருக்குப் பரவக்கூடிய தொற்று நோய் ஒன்றினால் பாதிக்கப்பட்டுள்ள மருத்துவ சேவை வழங்குநர் தமது வாடிக்கையாளருக்கு ஆபத்து ஏதும் நேராத வண்ணம் தாம் பணியாற்றுவதை உறுதி செய்ய வேண்டும்.
(2) வாடிக்கையாளருக்குப் பரவக்கூடிய தொற்று நோய் ஒன்றினால் பாதிக்கப்பட்டுள்ள மருத்துவ சேவை வழங்குநர் வாடிக்கையாளருக்கு அந்த நோய் பரவாத வகையில் பணியாற்ற வேண்டி தாம் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து, உப பிரிவு 1 உடன் மட்டுப்படுத்தாத வகையில், தக்க மருத்துவரது அறிவுரையை நாடி அதனைப் பின்பற்ற வேண்டும்.

## 5 சுகாதார சேவை வழங்குநர் சில குறிப்பிட்ட கடுமையான நோய்களை தம்மால் குணப்படுத்த இயலும் என சொல்லிக்கொள்ளக் கூடாது

(1) ஒரு சுகாதார சேவை வழங்குநர், புற்று நோய், மற்றும் பிற குணப்படுத்த முடியாத நோய்களைக் குணப்படுத்த தாம் தகுதி பெற்றவர் என்றோ, அப்படி முடியுமென்றோ, அல்லது அப்படிச் செய்ய தாம் தயார் என்றோ சொல்லக் கூடாது.
(2) ஒரு சுகாதார சேவை வழங்குநர் இந்நோய்களின் அறிகுறிகளை மட்டுப்படுத்தவோ அல்லது அவற்றிற்குச் சிகிச்சையளிக்க முடியும் என்றோ உரிமை வேண்டலாம். அவ்வாறு வேண்டின் அதற்கு ஆதாரம் காட்ட வேண்டும்.

## 6 சுகாதார சேவை வழங்குநர்கள் தொற்றுநோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த தரமான முன்னெச்சரிக்கைகளைப் பின்பற்ற வேண்டும்

(1) சுகாதார சேவை வழங்குநர் தனது தொழிலில் தொற்றுநோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த சிறந்த முன்னெச்சரிக்கைகளைக் கைக்கொள்ள வேண்டும்.
(2) உப பிரிவு (1) – உடன் மட்டுப்படுத்தாமல், சட்டத்தின் பிரிவு 51 (3) இன் கருத்திற்குள் தோலை ஊடுருவிச் செயன்முறையை மேற்கொள்ளும் ஒரு சுகாதார சேவை வழங்குநர், இச் செயன் முறையை மேற்கொள்வது தொடர்பாக சட்டத்தின் கீழுள்ள பொருத்தமான ஒழுங்கு விதிகளைப் பேண வேண்டும்.

## 7 சிகிச்சை அறிவுரை குறித்த பொருத்தமான நடத்தை

(1) பதிவு செய்யப்பட்ட ஒரு சுகாதார சேவை வழங்குநரிடம் சிகிச்சையை வேண்டுவதை அல்லது தொடர்வதைத் தடுக்கும் வகையில் தனது வாடிக்கையாளர்களுக்கு சுகாதார சேவை வழங்குநர் ஒருவர் அறிவுரை கூற முயற்சித்தல் கூடாது.
(2) தமது உடல் நலன் தொடர்பான, தெளிவான தெரிவை மேற்கொள்வதற்கு தனது வாடிக்கையாளர்களுக்கு உள்ள உரிமையை ஒரு சுகாதார சேவை வழங்குநர் அங்கீகரிக்க வேண்டும்.
(3) சுகாதார சேவை வழங்குநர் தனது வாடிக்கையாளர்களின் நலனுக்காக, தமது சக தொழிலர்களுடனும், ஏனைய உடல்நல சேவை வழங்குநர்களுடனும், முகவர்களுடனும் தொடர்பாடவும், ஒத்துழைக்கவும் வேண்டும்.
(4) பிறிதொரு சுகாதார சேவை வழங்குநரால் தனது வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை தொடர்பாக ஒரு சுகாதார சேவை வழங்குநருக்கு மிகுந்த கரிசனை இருக்குமாயின், அதுபற்றி உடல்நல முறைப்பாடுகள் ஆணையத் (Health Care Complaints Commission) திற்குத் தெரிவிக்க வேண்டும்.

## 8 சுகாதார சேவை வழங்குநர்கள் மது அல்லது போதைப் பொருட்களின் பாதிப்பிற்குட்பட்ட நிலையில் பணியில் ஈடுபடலாகாது

(1) ஒரு சுகாதார சேவை வழங்குநர் மது அல்லது சட்டவிரோத போதை மருந்தை உட்கொண்டதன் பாதிப்பில் உள்ள நிலையில் பணியில் ஈடுபடக்கூடாது.
(2) வைத்திய ஆலோசனைப்படியான மருந்தைப் பாவித்துக்கொண்டிருக்கும் ஒரு சுகாதார சேவை வழங்குநர், தனது பணியை மேற்கொள்வதில் தான் பாவிக்கும் மருந்து ஏதும் தாக்கம் விளைவிக்குமா என்பது பற்றி தனக்கு மருந்தளித்த சுகாதார சேவை வழங்குநரிடம் ஆலோசனை பெற வேண்டும்: அத்துடன் தனது ஆற்றலைப் பாதிக்கும் அல்லது பாதிக்கக்கூடிய அத்தகைய சூழ்நிலைகளில், வாடிக்கையாளர்களுக்கு சிகிச்சையளிப்பதிலிருந்து தவிர்ந்துகொள்ள வேண்டும்.

## 9 குறிப்பிட்ட சில உடல் அல்லது உள பாதிப்பு நிலைமைகளையுடைய சுகாதார சேவை வழங்குநர்கள், பணியில் ஈடுபடக்கூடாது

சுகாதார சேவை வழங்குநர், தனது பணியில் ஈடுபடும் ஆற்றலைப் பாதிக்கின்ற அல்லது பாதிக்கக் கூடுமான அல்லது வாடிக்கையாளர்களை ஆபத்திற்கு உட்படுத்துகின்ற, உடல் அல்லது உள பலவீனம், இயலாமை நிலை அல்லது நோயினால் வருந்தும் நிலையில் (மதுவிற்கு அல்லது பரிந்துரைக்கப்பட்ட அல்லது பரிந்துரைக்கப்படாத போதை மருந்து பாவனைக்கு அடிமைப்பட்டிருத்தல் உட்பட) பணியில் ஈடுபடக்கூடாது.

## 10 சுகாதார சேவை வழங்குநர்கள் வாடிக்கையாளர்களை பண ரீதியில் சுரண்டக்கூடாது

(1) ஒரு சுகாதார சேவை வழங்குநர் வாடிக்கையாளர்களை வேறு சுகாதார சேவை வழங்குநர்களிடம் அல்லது மருந்துகள், சிகிச்சைப் பொருட்கள், அல்லது கருவிகள் வழங்குநர்களிடம் ஆற்றுப்படுத்துவதற்கென, பண ரீதியான தூண்டுதல்களை அல்லது பரிசுப்பொருட்களை ஏற்கக்கூடாது.
(2) ஒரு சுகாதார சேவை வழங்குநர், வேறு சுகாதார சேவை வழங்குநர்களிடமிருந்து வாடிக்கையாளர் ஆற்றுப்படுத்தல்களுக்கு பிரதியுபகாரமாக பண ரீதியான தூண்டுதல்களையோ, பரிசுப் பொருட்களையோ அளித்தல் கூடாது.
(3) வாடிக்கையாளர்களின் ஆரோக்கியத்தை அல்லது நலனை பேணுவதற்காக வடிவமைக்கப்பட்ட சிகிச்சைகளை அல்லது சேவைகளை மட்டுமே சுகாதார சேவை வழங்குநர்கள் வழங்க வேண்டும்.

## 11 சுகாதார சேவை வழங்குநர்கள் நோயாளிகளுக்கு சிகிச்சையளித்துக் கற்ற அனுபவ வாயிலான அடிப்படையைப் (clinical basis) பெற்றிருக்க வேண்டுமென வேண்டப்படுகின்றனர்

போதிய அனுபவ வாயிலான கற்றல் அடிப்படையின்றி, ஒரு சுகாதார சேவை வழங்குநர் நோயை அடையாளம் காணவோ, சிகிச்சையளிக்கவோ கூடாது.

## 12 சுகாதார சேவை வழங்குநர்கள் தமது வாடிக்கையாளர்களுக்கு பிழையான தகவலளித்தல் கூடாது

(1) ஒரு சுகாதார சேவை வழங்குநர் தனது தகைமைகள், பயிற்சி அல்லது தொழில்சார் இணைப்புகள் தொடர்பாக அல்லது தான் வழங்கும் பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பாக எவ்விதமான பிழையான தகவல் அளிப்பதிலோ, திரித்துக் கூறுவதிலோ ஈடுபடக்கூடாது.
(2) வாடிக்கையாளர் கேட்பாராயின், ஒரு சுகாதார சேவை வழங்குநர் தனது தகைமைகள், பயிற்சி அல்லது தொழில்சார் அங்கீகாரங்கள் பற்றிய உண்மையான தகவல்களை வழங்க வேண்டும்.
(3) ஒரு சுகாதார தொழில் வழங்குநர், தனது சிகிச்சைத் திறன் பற்றி அல்லது வழங்கப்படும் சேவைகள் பற்றி நேரடியாகவோ அல்லது விளம்பரங்கள் மற்றும் ஊக்குவிப்பு பொருட்கள் வாயிலாகவோ உரிமைகள் கோரக் கூடாது. ஆனால் அவ்வாறு உரிமை கோரின் அவற்றிற்கு ஆதாரம் காட்ட வேண்டும்.

## 13 சுகாதார தொழில் வழங்குநர்கள் தமது வாடிக்கையாளருடன் பாலியல் அல்லது தவறான தனிப்பட்ட உறவில் ஈடுபடக்கூடாது

(1) ஒரு சுகாதார சேவை வழங்குநர், ஓரு வாடிக்கையாளருடன் பாலியல் அல்லது வேறு நெருங்கிய தனிப்பட்ட உறவில் ஈடுபடக்கூடாது.
(2) ஒரு சுகாதார சேவை வழங்குநர், தனது முன்னாள் வாடிக்கையாளர் ஒருவருடன் பாலியல் அல்லது வேறு நெருங்கிய தனிப்பட்ட உறவில் ஈடுபடுவதற்கு முன்பு, அவர்களுக்கிடையிலான சிகிச்சை உறவு முடிவுற்று பொருத்தமான காலம் கடந்திருத்தலை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

## 14 சுகாதார தொழில் வழங்குநர்கள் தகுந்த அந்தரங்கத் தகவல் பாதுகாப்புச் சட்டங்களைப் பேணுதல் வேண்டும்

ஒரு சுகாதார சேவை வழங்குநர் தனது வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தகவல்கள் தொடர்பான மாநில மற்றும் பொதுநலவாய அரசுகளின் சட்டங்களைப் பேண வேண்டும்.

## 15 சுகாதார சேவை வழங்குநர்கள் பொருத்தமான பதிவேடுகள் வைத்திருத்தல் வேண்டும்

ஒரு சுகாதார சேவை வழங்குநர் ஒவ்வொரு வாடிக்கையாளரைப் பற்றியும் மிகச் சரியான, இலகுவில் வாசிக்கக் கூடிய மற்றும் அந்தந்த காலத்திற்குறிய வைத்திய ஆலோசனைப் பதிவேடுகளை வைத்திருத்தல் வேண்டும்.

## 16 சுகாதார சேவை வழங்குநர்கள் தக்க காப்புறுதி வைத்திருத்தல் வேண்டும்

சுகாதார தொழில் வழங்குநர், தனது தொழில் தொடர்பான பொருத்தமான இழப்பீட்டுக் காப்புறுதி வைத்திருத்தலை உறுதி செய்ய வேண்டும்.

## 17 குறிப்பிட்ட சுகாதார சேவை வழங்குநர்கள், நடத்தைக் கோவையையும் வேறு தகவல்களையும் பார்வைக்கு வைத்திருக்க வேண்டும்

(1) ஒரு சுகாதார சேவை வழங்குநர், தான் சேவை வழங்கும் அனைத்து இடங்களிலும் பின்வரும் ஒவ்வொரு ஆவணத்தினதும் பிரதியொன்றைப் பார்வைக்கு வைத்திருத்தல் வேண்டும்:
  (a) இந்நடத்தைக் கோட்பாடு.
  (b) வாடிக்கையாளர்கள் எவ்வாறு முறைப்பாடுகளை 'Health Care Complaints Commission'- இடம் அளிக்கலாம் என்பது பற்றித் தகவல் தரும் ஒரு ஆவணம். இவ்வாவணம் சுகாதார இலாக்காவின் 'பணிப்பாளர் நாயக'த்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வடிவில் இருத்தல் வேண்டும்.
(2) இவ்வாவணப் பிரதிகள் தக்க இடங்களில் உள்வரும் வாடிக்கையாளர்களால் இலகுவில் காணக்கூடிய விதத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
(3) இச்சட்டக்கூறு பின்வரும் இடங்கள் எவற்றிற்கும் பொருந்துவதில்லை:
  (a) பொதுச்சுகாதார அமைப்பிற்கு உட்பட்ட ஒருவரின் பணித்தளம் (*Health Services Act 1997*) இன் பகுதி 6 இல் விவரிக்கப்பட்டதன்படி).
  (b) தனியார் மருத்துவ மனைகள் அல்லது பகல்நேர செயற்பாட்டு நிலையங்கள் (*Private Hospitals and Day Procedure Centers Act 1988* இல் விவரிக்கப்பட்டதன் படி).
  (c) NSW அம்புலன்ஸ் சேவைத்தளங்கள் (*Health Services Act 1997* இல் விவரிக்கப்பட்டதன்படி)
  (d) அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர் தளங்கள் (பொதுநலவாய அரசின் *Aged Care Act 1997* இன் அர்த்தத்திற்கு உட்பட்ட).

## 18 பார்வை சம்பந்தப்பட்ட கருவிகளை விற்றலும் வழங்கலும்

(1) சுகாதார சேவை வழங்குநர் ஒழுங்கு விதி தேசிய சட்டத்தின் 122 பிரிவின் கீழ் பார்வை சம்பந்தப்பட்ட கருவிகளை சிபார்சு செய்ய அதிகாரம் பெற்ற ஒருவரின் சிபாரிசின் (prescription) படி தாம் மேற்கொள்வதன்றி ஒரு சுகாதார சேவை வழங்குநர் பார்வை சம்பந்தப்பட்ட ஒரு கருவியை (அழகு சாதன கண்ணாடி வில்லைகள் – contact lenses – தவிர்ந்த) ஒரு நபருக்கு விற்கவோ வழங்கவோ கூடாது.
(2) ஒரு சுகாதார சேவை வழங்குநர் பின்வரும் தன்மைகளைத் தாம் கொண்டிருந்தாலன்றி கண்ணாடி வில்லைகளை ஒரு நபருக்கு விற்கவோ வழங்கவோ கூடாது.
  (a) *Optical Dispensers Act 1963* *(கண்ணாடி வழங்குவோர் சட்டம் 1963)* நீக்கப்படுவதற்கு சற்று முன் அதன் கீழ் உரிமையளிக்கப்பட்டிருத்தல்
  (b) கண்ணாடி வழங்கலில் 'சான்றிதழ் IV' (Certificate IV) பெற்றிருத்தல் அல்லது அதற்கு இணையான தகைமையைப் பெற்றிருத்தல்
(3) ஒரு நபருக்கு கண்ணாடி வில்லைகளை விற்கும் அல்லது வழங்கும் ஒரு சுகாதார சேவை வழங்குநர், கண்ணாடி வில்லைகளை அணிவதால் ஏற்படக் கூடுமான எதிர் விளைவுத் தாக்கங்கள் பற்றிய அறிவுரை உட்பட கண்ணாடி வில்லைகளைப் பராமரித்தல், கையாளல், அணிதல் பற்றிய எழுத்து மூலமான தகவலை அந்நபருக்கு வழங்க வேண்டும்.
(4) இவ்வாசகம் பின்வருவனவற்றின் விற்பனை மற்றும் வழங்கலுக்குப் பொருந்தாது:
  (a) கையடக்க உருப்பெருக்கிகள் (hand-held magnifiers)
  (b) நீர் மூழ்கு முகமூடிகள் (diving masks) அல்லது நீச்சல் முகமூடிகளில் (goggles) பயன்படுத்த மட்டும் தயாரிக்கப்பட்ட திருத்தல் வில்லைகள் (corrective lenses)
  (c) ஏற்கனவே தயாரிக்கப்பட்ட மூக்குக் கண்ணாடிகள், அவை:
  (i) வெள்ளெழுத்தின் (presbyopia) தாக்கங்களை மட்டும் அகற்றக்கூடியவையாகத் தயாரிக்கப்பட்டிருத்தல், அத்துடன்
  (ii) அவை சம பலம் கொண்ட 2 வில்லைகளைக் கொண்டிருத்தல், plus one dioptre – ஐ அல்லது அதற்கு மேற்பட்ட பலத்தைக் கொண்டிருத்தல், ஆனால் plus 3.5 dioptre – ஐ விடக் கூடியதாக அது இருத்தல் கூடாது.
(5) இவ்வாசகத்தில்:

***அழகு சாதன கண்ணாடி வில்லைகள்*** என்பது ஒளி முறிவை (refractive) யோ அசாதாரண தன்மையையோ அல்லது பார்வைக் குறைபாட்டை நீக்கவோ, சிகிச்சையளிக்கவோ, திருத்தவோ உருவாக்கப்பட்டதல்லாத கண்ணாடி வில்லைகளைக் குறிக்கும்.

***பார்வை சம்பந்தப்பட்ட கருவி*** என்பது சுகாதார சேவை வழங்குநர் ஒழுங்கு விதி தேசிய சட்டத்தின் 122 பிரிவிலுள்ள அதே கருத்தைக் கொண்டுள்ளது.

# உங்கள் சுகாதார நலன் பற்றி ஏதும் கரிசனையா?

HEALTH CARE COMPLAINTS COMMISSION

பதிவுசெய்யப்படாத சுகாதார சேவை வழங்குநர்களுக்கான நடத்தைச் சட்டக் கோவையானது உங்களது வழங்குநரிடமிருந்து நீங்கள் எதனை எதிர்பார்க்கலாம் என்று தெளிவாய் எடுத்துக் கூறுகிறது. உங்களுக்கோ அல்லது உங்கள் உறவினருக்கோ வழங்கப்பட்ட சுகாதார சேவை பற்றி உங்களுக்கு ஏதும் கரிசனை இருப்பின் சேவை வழங்குனரிடம் உடனடியாகப் பேசவும். அனேக சந்தர்ப்பங்களில் சுகாதார சேவை வழங்குநர் அவற்றைத் தீர்த்து வைக்க முயற்சிப்பார்.

சேவை வழங்குநரின் பதிலில் உங்களுக்குத் திருப்தி இல்லையாயின் ஓர் அந்தரங்கமான உரையாடலுக்காக Health Care Complaints Commission (சுகாதார நலன் முறைப்பாட்டு ஆணையம்) – இன் விசாரணை சேவையை அழைக்க வேண்டிய எண் (02) 9219 7444 அல்லது இலவச எண் 1800 043 159 உங்கள் புகார் ஒரு பாலியல் அல்லது உடலியல் தாக்குதல் தொடர்பானதாயின் அல்லது ஒருவரின் உடனடி சுகாதாரம் அல்லது பாதுகாப்பு தொடர்பானதாயின் நீங்கள் ஆணையத்தினை உடனடியாகத் தொடர்பு கொள்ள வேண்டும்.

## 'Health Care Complaints Commission' என்பது யாது?

'Health Care Complaints Commission' (சுகாதார நலன் முறைப்பாட்டு ஆணையம்) என்பது, பொதுச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பைப் பேணுவதற்கான சுகாதார சேவைகள் பற்றிய புகார்களுக்குத் தீர்வு காண்பதற்கான ஒரு சுதந்திர அமைப்பாகும்.

## பிற மொழி சேவை

ஆங்கிலமல்லாத வேறொரு மொழியை முதலாம் மொழியாகக் கொண்டவர்களுக்கு உதவுவதற்கென ஆணையம் உரைபெயர்ப்பு சேவைகளைப் பயன்படுத்துகிறது. உங்களுக்கு உரைபெயர்ப்பாளர் ஒருவர் தேவையாயின், மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவையை (TIS National) 131 450 இல் அழைத்து 'Health Care Complaints Commission' – உடன் 1800 043 159 மூலம் தொடர்புபடுத்தும்படி கேட்கவும். (காலை 9.00 முதல் பிற்பகல் 5.00 வரை திங்கள் முதல் வெள்ளி வரை)

## மேலதிகத் தகவல்

'Health Care Complaints Commission' பற்றி மேலதிக விபரங்களுக்கு தரிசிக்கவும் www.hccc.nsw.gov.au

## 'Health Care Complaints Commission' – ஐத் தொடர்பு கொள்க

அலுவலக முகவரி: Level 13, 323 Castlereagh Street, SYDNEY NSW 2000
அஞ்சல் முகவரி: Locked Mail Bag 18, STRAWBERRY HILLS NSW 2012

தொலைபேசி: (02) 9219 7444 அல்லது NSW மாநிலத்தில் கட்டணமின்றி 1800 043 159
மின்நகல்: (02) 9281 4585 மின் அஞ்சல்: hccc@hccc.nsw.gov.au
தட்டச்சுத் தொலைபேசி உபயோகிப்போர் அழைக்க வேண்டிய எண்: (02) 9219 7555

NSW HEALTH